பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 08 2026** **SUNDAY** **6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

**1)** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோருக்கு முக்கிய பங்கு உள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** வந்தே மாதரம் தேசிய பாடலுக்கு அவமரியாதை செய்த காங்கிரஸ் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

**3)** கர்நாடக வனப்பகுதியில் மூன்று தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு திமுக, பாமக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

**4)** தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankita Dhyani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோருக்கு முக்கிய பங்கு உள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த காட்டாங்குளத்தூரில் தனியார் கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

2014-ஆம் ஆண்டுக்கு பிறகு உயர்கல்வித்துறை பெரிய அளவில் வளர்ச்சி கண்டிருப்பதாக கூறிய அவர், அது தொடர்பான விவரங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

உயர்கல்வித்துறையில் மகளிரின் பங்களிப்பு தற்போது 42 சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆராய்ச்சியின் பலன்கள் சமூகத்திற்கு பயனளிக்கும்போதுதான் அதன் உயரிய இலக்கு எட்டப்பட்டதாக கருத முடியும் என்றும் அவர் கூறினார்.

எதிர்காலத்தை தீர்மானிப்பதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், குவாண்டம் தொழில்நுட்பம், செமி கண்டெக்டர் ஆராய்ச்சி, ரோபோட்டிக்ஸ் மற்றும் உயிரி தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்துகள் 100-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக மாணவர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டிற்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் மாணவர்கள் செயல்பட வேண்டும் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<<>>>>>

வந்தே மாதரம் தேசிய பாடலுக்கு அவமரியாதை செய்த காங்கிரஸ் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

ராஜஸ்தானின் Chittorgarh-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், சுதந்திர தினத்தன்று காங்கிரஸ் தலைமையகத்தில் இசைக்கப்பட்ட வந்தே மாதரம் பாடலை பாதியிலேயே நிறுத்த அக்கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி அறிவுறுத்தியதாக தெரிவித்தார்.

தில்லி செங்கோட்டையில் முதல் முறையாக வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதேபோல், நாடு முழுவதும் சுதந்திர தின நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்டதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

கர்நாடக வனப்பகுதியில் மூன்று தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு திமுக, பாமக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவத்தில் கர்நாடக அரசுக்கு எதிராக தனது கண்டனத்தை தவெக அரசு பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடு பெற்றுத்தருவதோடு, அரசு வேலையும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தவெக அரசை, திரு மு.க.ஸ்டாலின் வலியுறத்தியுள்ளார்.

பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸும் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளதோடு, இதுகுறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

கர்நாடகாவின் சாம்ராஜ்நகர் மாவட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் மான் வேட்டையாடியதாக பொய்யான குற்றச்சாட்டின்பேரில் அப்பகுதியை சேர்ந்த மூன்று தமிழர்களை வனத்துறை சுட்டுக்கொன்றுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையை கர்நாடக அரசிடமிருந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு தமிழக அரசு தனது கண்டனத்தை கர்நாடக அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு கர்நாடக அரசு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகமும் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இப்பிரச்சினையில் தொடர்புடைய வனத்துறையினரை பணிநீக்கம் செய்து கைது செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த துப்பாக்கிச்சூடு குறித்து கர்நாடக அரசிடம் உரிய விளக்கத்தை தவெக அரசு கேட்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்து, உண்மையை வெளிக்கொண்டுவர உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு டி டி வி தினகரன், தவெக அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte — வி ஆர் துரை - 45 Sec.)*

<<<<<>>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் தானியங்கி இயந்திரத்தின் மூலம் ஆவின் பால் விற்பனை இன்று முதல் தொடங்கியுள்ளது.

பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கும் விதமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ராஜசேகரன் - 30 Sec.)***

<<<<<>>>>>

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பு கருதி பரிசல் இயக்க மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — தண்டபாணி - 35 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் வார விடுமுறை நாளான இன்று சுற்றுலாப்பயணிகள் குவிந்தனர்.

---------------

மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்காக திறந்துவிடப்படும் நீரின் அளவு வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

---------------

பாங்காக்கிலிருந்து, சென்னைக்கு தங்கத்தை கடத்தி வந்தது தொடர்பாக மியான்மரை சேர்ந்த இருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankita Dhyani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

துருக்கி ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Advikaa Nair** வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர், 6-11, 7-11, 11-4, 11-2, 11-6 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **Emilia Hartmann**-ஐ வென்றார்.

-------------------

**Brownsburg** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Niki Kaliyanda Poonacha -** ஈக்வெடாரின் **Gonzal Escober** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **6-4, 6-1** என்ற செட் கணக்கில், நெதர்லாந்தின் **Bart Stevens** — அமெரிக்காவின் **Robert Cash** இணையை வென்றது.

------------------

அகமதாபாதில் நடைபெற்றுவரும் **18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

-------------

நெதர்லாந்தின் **Amstelveen-**ல் நடைபெற்ற உலகக்கோப்பை ஹாக்கிப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா — சீனா இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**<<<<<END>>>>>**